www.tkedu.lk



புலமை வித்தகன் வெளியீடு

5

தரம் 5


தொடர் - 2 இலவசக்கருத்தரங்கு


ஆசிரியர் இ.பிரசாந்தன் தரம் 5


சரியான விடையின் கீழ்க்கோடிடுக

1. வகுப்பிலுள்ள மாணவர்களில் ஒவ்வொரு 5 பேருக்கும் 2 பேர் பரீட்சை எழுதவில்லை என அறிக்கப்பட்டது. அதன்படி பரீட்சை எழுதியவர்கள் 15 பேர் எனின், அவ்வகுப்பிலுள்ள மொத்த மாஒவர்கள் எத்தனை பேர்?
   25 2. 30 3. 21

2. இரும்பு ஒட்டுத் தொழிற்சாலை ஒன்றில் 2 கம்பிகளைப் பொருத்தி ஒட்டுவதற்கு ரூபாய் 50.00 செலுத்த வேண்டும். 9 கம்பித்துண்டுகளைஒன்றாகப் பொருத்துவதற்கு செலவாகும் பணம் எவ்வளவு?
   ரூபாய் 450.00 2. ரூபாய் 400.00 3. ரூபாய் 500.00







3. மேலுள்ள தொடர்பை விளங்கி சதுரத்திற்கான பெறுமதியைக் காண்க
   1. 7 2. 5 3. 9

4. 3 மீற்றர் நீளமும் 2 மீற்றர் அகலமும் உடைய சுவர் ஒன்றிற்கு தீந்தை பூசுவதற்கு 2 லீற்றர் தீந்தை தேவைப்பட்டது எனின், 6 மீற்றர் நீளமும் 3 மீற்றர் அகலமும் உடைய சுவரிற்குப் பூசுவதற்குத் தேவையான திந்தை எவ்வளவு?
   4 லீற்றர் 2. 5 லீற்றர் 3. 6 லீற்றர்

5. கோகுலன், கண்ணன், குமரன் அகிய மூவரும் தனித்தனியாக ரூபாய் 81.00 ஐ கையில் வைத்துக் கொண்டு விளையாடுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருமுறை தோற்கும்போதும் தம்மிடமுள்ள பணத்தில் 1/3 ஐ வென்றவருக்கு வழங்க வேண்டும். கண்ணன் இரண்டு முறை தொடர்ந்து தோற்றால் அவனிடம் உள்ள பணம் எவ்வளவு?
   ரூபாய் 27.00 2. ரூபாய் 36.00 3. ரூபாய் 54.00

6. மாலா தனது உண்டியில் 5 ரூபா, 2 ரூபா நாணயங்கள் வைத்திருந்தாள். உண்டியலிலுள்ள நாணயங்களை எண்ணும் போது 32 நாணயங்கள் இருந்தன. அவற்றின் பெறுமதி 115.00 ரூபா என கூறியாள். எனின் மாலாவிடம் எத்தனை 5 ரூபா நாணயக்குற்றிகள் இருந்திருக்கும்?
   1. 17 2. 23 3. 20

7. ஹர்சாலியின் தந்தை 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளிநாட்டிலிருந்து வருவார். அவர் இறுதியாக 2009 ஆம் ஆண்டு வந்திருந்தார் எனில் அடுத்து அவர் எந்த ஆண்டு மீண்டும் வந்திருப்பார்?
   1. 2014 2. 2012 3. 2013

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

www.lkedu.lk


8. ஒரு வகுப்பிலுள்ள 10 மாணவர்களில் 7 மாணவர்கள் பச்சை நிறப்பந்தை வைத்துள்ளனர். 6 மாணவர்கள் சிவப்பு நிறப்பந்துகளை வைத்துள்ளனர். அனைத்து மாணவர்களும் யாதாயினும் ஒரு பந்தையேனும் வைத்துள்ளனர். சில மாணவர்கள் இரு நிறப்பந்துகளையும் வைத்துள்ளனர். எனின் . இரு நிறப்பந்துகளையும் வைத்துருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?
   1. 3 2. 6 3. 7

9. X என்னும் இடத்திலிருந்து நடக்க ஆரம்பித்த மாலா மேற்குநோக்கி 4m தூரமும் அவ்விடத்திலிருந்து தனது வலப்பக்கமாகத்திரும்பி 5m தூரமும் அதன்பின் அங்கிருந்து தனது இடப்பக்கமாகத் திரும்பி 7m மீற்றர் தூரமும், அவ்விடத்திலிருந்து மீண்டும் தனது இடப்பக்கம் திரும்பி 5m தூரமும் சென்று Y என்னும் இடத்தை அடைந்தாள். இடம் X இற்கும் இடம் Y இற்கும் இடையிலான தூரம் யாது?
   1. 21 மீற்றர் 2. 11 மீற்றர் 3. 16 மீற்றர்

10. ஒரு பேரூந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதிலுள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் 2 மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 5 பெண் பயணிகள் ஏறிய பின்னர் ஆண் பயணிகளினதும், பெண் பயணிகளினதும் எண்ணிக்கை ஒன்றுக்கொன்று சமன் எனின் பேரூந்திலுள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை.
   1. 5 2. 10 3. 15

11. முகம் பார்க்கும் கண்ணாடி முன் நின்ற எனது அப்பா தனது விம்பத்தைப் பார்த்து கூறிய மிகச் சரியான கூற்று
   1. இக்கண்ணாடியில் தெரிபவரின் தாயின் கணவர் நான் ஆவேன்.
   2. இக்கண்ணாடியில் தெரிபவர் எனது தந்தையின் ஒரே புதல்வராவார்.
   3. இக்கண்ணாடியில் தெரிபவர் எனது சகோதரனின் தந்தையாவார்.

❖ **நபர் ஒருவர் இடம் P இலிருந்து இடம் Q இற்கு நடந்து சென்ற பாதை கீழே தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து 12, 13 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**




12. இடம் P இலிருந்து Q இற்கு சென்ற நபர் எத்தனை தடவைகள் கிழக்கு நோக்கிச் சென்றார்?
   1.2 2. 3 3. 4

13. இடம் P இலிருந்து Q இற்குச் செல்லும் போது அந்நபர் எத்தனை முறை வலது பக்கமாகத் திரும்பினார்?
   1. 5 2. 4 3. 3

14. ராம் ஒரு புத்தகத்தின் 16ம் பக்கத்திலிருந்து 80ம் பக்கம் வரை வாசித்தான். ஆனால் புத்தகத்தின் 8 பக்கங்கள் தவறவிடப்பட்ட நிலையில் ராம் புத்தகத்தை வாசித்தான் எனின் அவன் வாசித்த மொத்த பக்கங்களின் எண்ணிக்கை.?
   1. 65 2. 57 3. 60

15. பேருந்து வண்டியில் ஏறிய சிந்து டிக்கட் வாங்கிக் கொண்டு 50 ரூபாய்தாள் நாணயம் ஒன்றினைக் கொடுத்தான். பேருந்து நடத்துநர் சிந்துவிடம் இன்னும் ரூ.18ஐ வாங்கிக கொண்டு ரூ.20 ஐ மீதியாகக் கொடுத்தான். எனின் சிந்துவிற்கானபேருந்துக் கட்டணம் யாது?
   1. 48 2. 68 3. 88

16. இவ்விரு பாத்திரங்களை மாத்திரம் பயன்படுத்தி1l பாலைச் சரியாக அளக்க முடியுமா?
   1. முடியும்
   2. முடியாது
   3. மேலதிக தகவல்கள் தேவை



www.lkedu.lk

17. ஒவ்வொன்றும் 25m நீளமுள்ள 4 உலோகத் துண்டுகள் ஒரு தனித் துண்டாக ஒட்டப்பட்டன. ஒவ்வொரு தடவை ஒட்டும்போது ஒவ்வோர் உலோகத் துண்டின் 5cm ஐ ஒன்றன்மீதொன்று வைக்க நேரிட்டது. இறுதியாகக் கிடைக்கும் உலோகத் துண்டின் நீளம் யாது?
    1. 85 cm 2. 80 cm 3. 75 cm

18. ஒரு பெட்டியில் உள்ள பழங்களில் 1 தடவையில் 10 பழங்களை எடுக்கும் வேளையில் 3 பழங்கள் பழுதடைந்திருக்கும். அவ்வாறு பழுதடைந்த பழங்கள் 18 எனின் பெட்டியில் ஆரம்பத்தில் இருந்த பழங்கள் எத்தனை?
    1. 13 2. 28 3. 60

19. பூமரமொன்றில் குறித்த எண்ணிக்கையில் பூக்கள் உள்ளன. அங்கு வந்த வண்ணத்துப்பூச்சிகளில் ஒரு பூவில் ஒரு வண்ணத்துப்பூச்சி வீதம் இருந்தால் ஒரு வண்ணத்துப்பூச்சி எஞ்சும். ஒரு பூவில் இரண்டு வண்ணத்துப்பூச்சி வீதம் இருந்தால் மூன்று பூக்கள் வீதம் எஞ்சும். எனின் அங்கு வந்த வண்ணத்துப்பூச்சிகளின் எண்ணிக்கை யாது?
    1. 7 2. 8 3. 9

20. 16 படிகள் கொண்ட படிக்கட்டில் மதுசா முதல் படியிலும், மதுரன் 16ஆம் படியிலும் நிற்கின்றனர். மதுசா மூன்று படிகள் வீதம் ஏறும் போது, மதுரன் இரு படிகள் வீதம் இறங்கினால், இருவரும் எந்தப்படியில் சந்திப்பர்?
    1. 9 2. 10 3. 11



புலமை வித்துகள்